www.maiam.com /maiamofficial

மக்கள் நீதி மய்யம்

PR-15/SH-01/27102021/T

30 அக்டோபர் 2021
சென்னை

# விபத்தில்லா தீபாவளியை உறுதி செய்யுங்கள்!

**30-10-2021**

வணக்கம்,

கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரத்தில் நிகழ்ந்த பட்டாசுக்கடை விபத்தில், 6 பேர் உயிரிழந்தனர்; 10க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இந்த விபத்து துரதிருஷ்டவசமானது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்திற்கு மக்கள் நீதி மய்யம் ஆறுதல் தெரிவிக்கிறது.

இம்மாதிரி துயரமான சம்பவங்கள் இனி நிகழாமல் இருக்கட்டும். அதற்காக சில விஷயங்களை மக்கள் நீதி மய்யம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

தீபாவளிப் பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே உள்ள நிலையில், தற்காலிகமாக பட்டாசுக் கடைகள் அமைக்கப்பட்டுவருகின்றன. இவற்றை அமைக்க, வெடிபொருள் சட்டம் 84ன்படி உரிமம் வழங்கப்படுகிறது. இதற்கு மாவட்ட நிர்வாகம் அல்லது மாநகர காவல் ஆணையரின் அனுமதியைப் பெற வேண்டும். மேலும், தீயணைப்புத் துறை, கடை அமையும் நிலத்தின் உரிமையாளர், சம்பந்தப்பட்ட பகுதி காவல்துறையிடம் தடையில்லாச் சான்று பெற்று விண்ணப்பிக்க வேண்டும்.

கடைகளைப் பொறுத்தவரை, ‘அவை பொதுமக்களின் வசிப்பிடங்களிலிருந்து 50 மீட்டர் தொலைவில் இருக்க வேண்டும்; ஒரு கடைக்கும் மற்றொரு கடைக்கும் குறைந்தபட்சம் 3 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்; எளிதில் தீப்பற்றாத பொருள்களால் கடைகள் அமைக்கப்பட வேண்டும். கடை அமைந்திருக்கும் பகுதியிலிருந்து 50 மீட்டர் தொலைவுக்குட்பட்டப் பகுதிகளில் பட்டாசுகள் வெடிக்கக்கூடாது’ என்றெல்லாம் விதிகள் உள்ளன.

இவையெல்லாம் பெரும்பாலும் முறையாகப் பின்பற்றப்படுவதேயில்லை. அந்தந்தத் துறை அதிகாரிகளை வளைத்துப்போட்டு கடைகள் அமைத்துவருகிறார்கள் என்பதே வருடந்தோறும் வரும் செய்தி. இந்தத் தவணையிலிருந்தாவது இம்மாதிரி விதிமீறல்களுக்கு முடிவுகட்டப்பட வேண்டும். அவரவர் அதிகார எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் அமைக்கப்பட்டுவரும் பட்டாசுக் கடைகளில் அதிகாரிகள் நேரடியாக ஆய்வுசெய்து, விதிமுறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

பண்டிகைகள், மக்களிடையே மகிழ்ச்சியைப் பரப்பத்தான் கொண்டாடுப்படுகின்றன. ஒருபோதும் அவை துயரத்தில் முடிந்துவிடக்கூடாது. கொரோனா தொற்றால் இரண்டு ஆண்டுகள் துயரத்தில் கழிந்த நிலையில், இப்போதுதான் இல்லம்தோறும் பண்டிகைச் சூழல் துளிர்க்கத் தொடங்கியுள்ளது. இந்நிலையில் வரவிருக்கும் தீபாவளி, அதிக முக்கியத்துவம் பெறுகிறது. அந்நாளை தீவிபத்தில்லா தீபாவளி நன்நாளாகக் கொண்டாட, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமிழக அரசு உடனடியாக எடுக்க வேண்டும் என மக்கள் நீதி மய்யம் கேட்டுக்கொள்கிறது.

E. SarathBabu

சரத்பாபு

மாநிலச் செயலாளர், மக்கள் நீதி மய்யம்.

புதிய எண் 4, பழைய எண் 172, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை,